மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.303/2017</u>

2025ம் ஆண்டு ஆகஸ்ட் 28ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வரதராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>28.08.2025 பி.வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. என்னுடன் பிறந்த சகோதர சகோதரிகள் யார் என்றால் யாரும் இல்லை. என் தாயார் விஜயா இந்த வழக்கில் 5ம் பிரதிவாதிகளாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் எனக்கு தெரிந்து அவ்வாறு இல்லை. நான் என் தாயாரோடு வசித்து வருகிறேன் என்றால் இல்லை தனியாகத்தான் வசித்து வருகிறேன். நான் தற்போது என்ன முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் 32/113 திருவள்ளுவர் நகர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். என் தாயார் கதவு எண்.114 திருவள்ளுவர் நகரில் வசித்து வருகிறார். நான் எனது சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறேன்.

2. அந்த வீடு எனது தாயார் பெயரில் உள்ளது என் தாயாரால் கிரயம் பெறப்பட்ட சொத்தா என்றால் ஆமாம் எந்த வருடம் கிரயம் தரப்பட்டது

என்றால் 2014 கிரயம் பெறப்பட்டது. என் தாயார் பெயரில் ஆன கிரைய ஆவணத்தைநான் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் அது இந்த வழக்கிற்கு அவசியம் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. என் தாயார் பிறந்த ஊர் எது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த விவரத்தை நானும் கேட்கவில்லை என் தாயாரும் என்னிடம் சொல்லவில்லை என் தாயாரின் உறவினர்கள் குறித்த விவரங்களை என் தாயாரிடம் சொல்லி உள்ளாரா என்றால் என் மாமா உள்ளார் என் தாத்தா மற்றும் ஆத்தா ஆகியோர்கள் இல்லை. எனது மாமா பெயர் முருகேசன். அவர் கரூரில் வசித்து வருகிறார்.

3. அவரது சொந்த ஊர் கரூரா என்றால் அது எனக்கு தெரியாது அங்கு வசிப்பது மட்டும்தான் தெரியும் என் தாயாரின் பெற்றோர் பெயர் நாச்சிமுத்து மற்றும் மாரியம்மாள். அவர்கள் ஊர் எனக்கு தெரியாது. அவர்களை நான் பார்த்ததுண்டா என்றால் சிறிய வயதில் பார்த்துள்ளேன். அவர்கள் ஊருக்கு நான் சென்று உள்ளேனா என்றால் இல்லை. என் மாமாவை தவிர என் தாயாரின் உறவினர்கள் வேறு யாரையாவது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது நாங்கள் போவதில்லை.

4. எனக்கு திருமணமாகி 15 ஆண்டுகள் ஆகிறது. எனது திருமணத்திற்கு என் தாயாரின் உறவினர்களை அழைத்தோமா என்றால் இல்லை. அதற்கு ஏதேனும் காரணம் உண்டா என்றால் இல்லை நானே அவர்களை அழைக்கவில்லை. என் மனைவியின் ஊர் திருப்பூர் அவர் கவுண்டர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என் தாயாரின் உறவினர்களை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும் யாரும் அவ்வாறு தெரிந்து கொள்ளாமல் இருக்க மாட்டார்கள் என்றும் தெரிந்து

கொண்டே வழக்கிற்காக என் தாயாரின் உறவினர்கள் யார் என்று எனக்கு தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் வெள்ளகோவில் அரசு மருத்துவமனையில் வைத்து பிறந்தேன். அங்கு பிறப்பு குறித்து பதிவேடுகள் பராமரிக்கிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நான் 25.05.1978 தேதியில் பிறந்தேன் என் தாயாருக்கு திருமணம் நடந்து எவ்வளவு நாட்கள் கழித்து நான் பிறந்தேன் என்றால் அது எனக்கு தெரியாது. என் பிறப்பை நான் பதிவு செய்துள்ளேனா என்றால் அது என் அப்பாவை தான் கேட்க வேண்டும். என் தாயார் பதிவு செய்தார்களா என்றால் அவன் மருத்துவமனையில் இருந்ததால் பதிவு செய்திருக்க வாய்ப்பில்லை. என் முதல் விசாரணையில் எனது வயது 45 என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

**6.** 1978 ஆம் தேதியில் பிறந்திருந்தால் எனக்கு தற்போது வயது 47 ஆக வேண்டும் என்றும் நான் 45 என்று என் வயதை சொல்லியுள்ள நிலையில் நான் 1980 ஆம் ஆண்டு தான் பிறந்திருக்க வேண்டும் என்றும் நான் என் பிறந்த தேதியையும் வயதையும் மாற்றி மாற்றி முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் பிறப்பு சான்றிதழ் என் வசம் உள்ளது என்றும் அதை நான் தாக்கல் செய்யும் பட்சத்தில் எனது உண்மையான தகப்பனார் யார் என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் அதை நான் தாக்கல் செய்யாமல் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7. நான் எந்த தேதியில் பிறந்தேன் என்பதை காண்பிப்பதற்கு அரசால் வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் என்னுடைய பள்ளி

சான்றிதழ்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஓட்டுனர் உரிமம் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன்.

8. ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கு பிறப்பு சான்றிதழ் கட்டாயம் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் ஓட்டுனர் உரிமம் பெற்ற போது எனது பிறப்பு சான்றிதழை கண்டிப்பாக அங்கு கொடுத்து தான் ஓட்டுனர் உரிமம் பெற என்றும், தற்போது வேண்டுமென்றே நான் எனது பிறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் உள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. பழனிச்சாமி என்பவரின் தாத்தா பாட்டி மற்றும் உறவினர்கள் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பழனிச்சாமி என்பவரின் ஊர் எது என்றால் கச்சேரி வலசு பழனிச்சாமி என்பவரின் பாட்டியின் ஊர் தெரியுமா என்றால் தெரியாது. பழனிசாமி என்பவரின் தாயார் ஊர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. பழனிசாமி என்பவரின் தாயாரின் உடன் பிறந்தவர்கள் குறித்த விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொதுவாக ஒருவரின் இறப்பை குறித்து அவரது குடும்ப உறுப்பினர்கள் தான் பதிவு செய்ய முடியும் என்றும் மூன்றாம் நபர்கள் பதிவு செய்ய முடியாது என்றும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பழனிசாமி என்பவரின் இறப்பை நான் பதிவு செய்தேனா என்றால் ஆமாம் நான் தான் பதிவு செய்தேன் எந்த முகவரியில் இறந்ததாக நான் பதிவு செய்தேன் என்றால் தோட்டத்தில் வைத்து இறந்ததால் அந்த முகவரியை வைத்து பதிவு செய்தேன். இறப்பு சான்றிதழ் பதிவுக்கு விண்ணப்பத்தில் நான் தான் கையொப்பம் போட்டு கொடுத்தேனா என்றால் ஆமாம்.

**10.** நான் பழனிச்சாமியின் இறப்பை பதிவு செய்யவில்லை என்றும் வாதி சாமிநாதன் தான் பழனிச்சாமி இறப்பை பதிவு செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் பழனிச்சாமி என்பவரின் மகன் இல்லை என்ற காரணத்தினால் என்னால் அவரின் இறப்பை பதிவு செய்ய இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் பழனிச்சாமியின் உறவுகள் குறித்த எந்த விவரங்களும் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பழனிச்சாமியின் மகனாக இருந்திருந்து அவருடனே வளர்ந்திருந்தால் பழனிச்சாமியின் உறவுகள் மற்றும் தாத்தா, பாட்டி ஆகியவை பற்றி எனக்கு நன்கு தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

11. நான் ஓட்டுனர் உரிமம் பெற்றதற்கு பின்பு தான் வாக்காளர் அடையாள அட்டை வாங்கினேன் என்றால் ஆமாம். எனது பிறப்பு சான்றிதழை கொடுத்து தான் நான் எனது ஓட்டுநர் உரிமத்தை வாங்கி உள்ளேன் என்றும் அந்த ஓட்டுநர் உரிமத்தை வைத்துதான் பின்னிட்டு ஆவணங்கான வாக்காளர் அடையாள அட்டை ஆகிய ஆவணங்களை நான் எனது பெயரில் வாங்கி உள்ளேன் என்றும் ஏதோ ஒரு போலியான ஆவணத்தை சமர்ப்பித்து தான் நான் மேற்படி ஆவணங்களை பழனிச்சாமியின் மகன் என்று சொல்லி பெற்று உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

12. காங்கேயம் மோட்டார் வாகன அலுவலகத்தில் தான் நான் எனது ஓட்டுநர் உரிமத்தை வாங்கினேனா என்றால் ஆமாம். நான் ரங்கசாமி நாயக்கர் மற்றும் விஜயா ஆகியோர்களுக்கு பிறந்த மகன் என்றும் பழனிச்சாமி என்பவருக்கு நான் பிறக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பழனிச்சாமி என்பவரின் மகன் என்பது உண்மையாக

இருந்திருந்தால் கண்டிப்பாக அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

13. நான் வெள்ளகோவில் வைத்து பிறக்கவில்லை என்றும் எனது பிறந்த ஊர் வேறு என்றும் அது எனக்கு நன்கு தெரிந்தும் அதை நான் சொல்ல மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பழனிச்சாமிக்கு ஒரே மகன் அவர் வாதி சுவாமிநாதன் மட்டும்தான் என்று சொன்னால் சரியல்ல. நானும் எனது தாயார் விஜயாவும் பழனிசாமி என்பவரின் சட்டப்படியான வாரிசுகள் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி தாவா தீர்ப்பாக தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.08.28 18:55:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்